Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com



**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654


# தினத்தளம்


PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,



**செய்தியாளர்கள் தேவை**

தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959



மலர் Volume : 01 | இதழ் Issue : 034 | திங்கள் Monday | 04.05.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுடன் திமுக, காங்கிரஸ், கொமதேக வேட்பாளர்கள் சந்திப்பு



தமிழகத்தில் மொத்தமுள்ள 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும்ஏப்ரல்23ஆம்தேதி வாக்குப்பதிவு நடந்து முடிந்தது. ஒரே கட்டமாகநடந்தஇந்தவாக்குப்பதிவு காலை 7:00 மணிக்கு தொடங்கி மாலை 6:00 மணிக்கு நிறைவடைந்தது இதில் சுமார் 85.15 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளது. கடந்த தேர்தல்களை காட்டிலும் இது சாதனை என்று இந்திய தேர்தல் ஆணையம்பெருமிதம் தெரிவித்துள்ளது. சுமார் 4 கோடிக்கும் அதிகமான மக்கள் தங்களுடைய வாக்கினை செலுத்தியுள்ளனர். தமிழக சட்டமன்ற தேர்தல் 2026 , 5 மாநில சட்டமன்றத் தேர்தல்நடந்துமுடிந்த நிலையில் தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகள் வெளியிடப்பட்டது. அதில் பெரும்பாலும் திமுகவிற்கு ஆதரவாக கூறப்பட்டுள்ளது. குறிப்பாக 2026 சட்டமன்றத் தேர்தலிலும் திமுக ஆட்சிக்கு வரும் என்று கூறப்பட்டுள்ளது .மேலும் தமிழக வெற்றிக்கழகம் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கூறப்படுகிறது. மேலும் திமுகவின் வெற்றி உறுதி செய்யப்பட்டு உள்ளது. இதனால் திமுக தலைமை மற்றும் நிர்வாகிகள் தொண்டர்கள் என ஒரு வித உற்சாகத்தில் இருப்பதாக கூறப்படுகிறது. முதலமைச்சர் மு .க .ஸ்டாலின் திமுக வேட்பாளர்களுடன் சந்திப்பு ஒன்றை நடத்தி உள்ளார். தேர்தல் முடிவுகள் அறிவிக்க இன்னும் ஒரு சில தினங்களில் உள்ள நிலையில் வேட்பாளர்களிடம் கட்சியின் நிலைமை மற்றும் தரைமட்ட செயல்பாடுகள் குறித்து தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களுடன் முதல்வர் கேட்டறிந்ததாககூறப்படுகிறது. குறிப்பாக இந்த கூட்டத்தில் கிருஷ்ணகிரி, சேலம் மற்றும் தென்காசி மாவட்டங்களில் போட்டியிட்ட திமுக வேட்பாளர்கள்கலந்து கொண்டனர். நிலவும் அரசியல் சூழல் வாக்காளர்களின் மனநிலை எதிர்க்கட்சிகளின் தாக்கம் உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து முதல்வர் மு .க. ஸ்டாலின் நேரடியாக கேட்டறிந்ததாக கூறப்படுகிறது. வேட்பாளர்கள் தங்கள் தொகுதிகளில் நடந்த தேர்தல் பிரச்சாரம் மக்கள் ஆதரவு எதிர்கொண்ட சவால்கள் ஆகியவற்றை விரிவாக விளக்கியதாக கூறப்படுகிறது. மேலும் கிராமப்புற ங்களில் மற்றும் நகர்ப்புறங்களில் வாக்காளர்கள் மனநிலையில் ஏற்பட்ட மாற்றங்கள் குறி த்தும் விவாதிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. ஸ்டாலினுடன் திமுக, காங்கிரஸ், கொமதேக வேட்பாளர்கள் சந்தித்து பேசினர்.தமிழ்நாடு முதல்வர் திமுக தலைவர் ஸ்டாலினை இன்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ளதிமுகதலைமை அலுவலகத்தில், கட்சி வேட்பாளர்கள் மு.பெ.சாமிநாதன், சாக்கோட்டை அன்பழகன், மடத்துக்குளம் ஜெயராமகிருஷ்ணன், தாராபுரம்டாக்டர்இந்திராணி, வீரபாண்டி டாக்டர் ஆ.கா.தருண் மற்றும் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளரும் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவருமான கு.செல்வப்பெருந்தகை, கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் வேட்பாளர்களான பொதுச்செயலாளர் ஈ.ஆர். ஈஸ்வரன், நித்தியானந்தம் ஆகியோர் நேரில் சந்தித்தனர். திமுகதுணைபொதுச்செயலாளர்கள் ஆ.ராசா எம்.பி, மு.பெ.சாமிநாதன், அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் டி.ஆர்.பி. ராஜா ஆகியோர் உடனிருந்தனர் இதனைத் தொடர்ந்து சில இடங்களில் அரசின் நலத்திட்டங்கள் நல்ல வரவேற்பு பெற்றதாகவும் சில பகுதிகளில் கூடுதல் கவனம் தேவைப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் எதிர்க்கட்சிகள் மேற்கொண்ட பிரச்சாரங்கள் மற்றும் அதன் தாக்கம் பற்றியும் ஆலோசிக்கப்பட்டதாக கூறப்படுகிறது தேர்தல் காலத்தில் சமூக ஊடகங்களின் பங்கு இளைஞர்களின் வாக்குகளின் ஆதரவு போன்ற அம்சங்களில் முக்கியமாக பேசப்பட்டதாக கூறப்படுகிறது.

# தேர்தல் முடிவுகளை உடனுக்குடன் அறிய புதிய இணையதள முகவரி




இந்த முறை நடைபெற்றதேர்தலில்அதிக வாக்குப்பதிவு இடம்பெற்றுள்ளதாக கூறப்படுகிறது. மாநிலம் முழுவதும் சுமார் 85 சதவீதத்துக்கும் மேல் வாக்குகள் பதிவாகியிருக்கலாம் என்ற மதிப்பீடுகள் வெளியாகியுள்ளன. சில தொகுதிகளில் 90 சதவீதத்தைத்தாண்டியிருக்கலாம் என்றும் கூறப்படுவதால், இந்த தேர்தல் முடிவுகள் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

தமிழகம் மட்டும் அல்லாமல், புதுச்சேரி, கேரளம், மேற்குவங்கம், அசாம் ஆகிய ஐந்து மாநிலங்களிலும் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தல்களின் முடிவுகள் மே 4ஆம் தேதி காலை 8 மணி முதல் வெளியிடப்படுகின்றன.

அந்த நேரத்திலிருந்து ஒவ்வொரு வாக்கு எண்ணிக்கை மையத்திலும் கணக்கெடுப்பு தொடங்கும். முதல் சுற்று முடிவுகள் வெளியாகும் தருணத்திலிருந்தே அரசியல் சூழல் சூடுபிடிக்கத் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த முடிவுகளை மக்கள் எளிதாகவும் விரைவாகவும் தெரிந்து கொள்ளும் வகையில், இந்திய தேர்தல் ஆணையம் தனிப்பட்ட இணையதள வசதியை உருவாக்கியுள்ளது.அந்த இணையதளத்தில் ஒவ்வொரு தொகுதியின் வாக்கு எண்ணிக்கை சுற்று வாரியாக புதுப்பிக்கப்பட்டு வெளியிடப்படும்.

தேர்தல் முடிவுகளை உடனுக்குடன் அறிந்துகொள்ள https://results.eci.gov.in/ என்ற இந்திய தேர்தல் ஆணையத்தின் பிரத்யேகமான இணையதளத்தில்,எந்த வேட்பாளர் முன்னிலையில் உள்ளார், வாக்கு வித்தியாசம் என்ன, எந்த கட்டத்தில் யார் முன்னிலை பிடித்துள்ளார் போன்ற தகவல்கள் நொடிக்குநொடி புதுப்பிக்கப்படும். இதனால், மக்கள் நேரடியாக வாக்கு எண்ணிக்கை மையத்திற்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லாமல், வீட்டிலிருந்தபடியே அல்லது கைப்பேசியிலிருந்தே முழு தகவல்களையும் அறிந்து கொள்ள முடியும்.

மேலும், தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள செல்பேசி செயலிகளின் மூலமும் இந்த தகவல்களை உடனுக்குடன் பார்க்க முடியும். வாக்காளர் உதவி செயலி மற்றும் மற்ற சேவைகள் மூலம் கூட நிலவரங்களை எளிதாக தெரிந்து கொள்ளும் வசதி வழங்கப்பட்டுள்ளது. முக்கியமாக, ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள தேர்தல் அதிகாரிகள் வழங்கும் அதிகாரப்பூர்வ தகவல்களே இணையதளம் மற்றும் செயலிகளில் நேரடியாக பதிவேற்றப்படும்.

இதனால் தவறான தகவல்கள் பரவுவதற்கான வாய்ப்பு குறையும். அதிகாரப்பூர்வ தகவல்களை மட்டுமே மக்கள் பார்க்கும் வகையில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. தேர்தல் முடிவுகளை அறிய இந்த முறை முழுமையான டிஜிட்டல் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அரசியல் கட்சிகள் மட்டுமின்றி, பொதுமக்களும் தங்களது தொகுதி நிலவரத்தை உடனுக்குடன் அறிந்து கொள்ளும் வகையில் இந்த ஏற்பாடு முக்கிய பங்கு வகிக்கும் என்கின்றனர் தேர்தல் ஆணைய அதிகாரிகள்.

சென்னை: 2026 தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகளை அறிய பொதுமக்கள், அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் என அனைவரும் ஆவலுடன் காத்திருக்கின்றனர். இந்த நிலையில், வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாளில் முடிவுகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள இந்திய தேர்தல் ஆணையம் சிறப்பு ஏற்பாடுகளை செய்துள்ளது. அதற்காக பிரத்யேக இணையதள முகவரியும், செல்போன் செயலிகளும் அறிவிக்கப்பட்டுள்ளன.


**வரி விளம்பரங்கள்**



தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959


# 3 மாதங்களில் வணிக எல்பிஜி விலை 81 சதவீதம் உயர்வு: ராகுல் காந்தி குற்றச்சாட்டு

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை மற்றும் அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு உள்ளிட்ட காரணிகளின் அடிப்படையில் பெட்ரோல், டீசல் மற்றும் சமையல் கியாஸ் சிலிண்டர்களின் விலைகளை எண்ணெய் நிறுவனங்கள் நிர்ணயம்செய்து வருகின்றன. இதில் சமையல் கியாஸ் சிலிண்டர்களின் விலையை மாதத்தின் முதல் தேதியில் மாற்றி அமைத்து வருகின்றன.

இதனிடையே,மாதத்தின் முதல் நாளான இன்று நாடு முழுவதும் கியாஸ் சிலிண்டர் விலையை எண்ணெய் நிறுவனங்கள் உயர்த்தியுள்ளன. அதன்படி, சென்னையில் 19 கிலோ எடை கொண்ட வர்த்தக பயன்பாட்டிற்கான



சிலிண்டர் விலை ரூ.993 உயர்த்தப்பட்டு ரூ. 3 ஆயிரத்து 237–க்கு விற்பனை செய்யப்படுகிறது. நாடு முழுவதும் வணிக பயன்பாட்டிற்கான கியாஸ் சிலிண்டர் விலை ரூ. 993 உயர்த்தப்பட்டுள்ளது. இதனால், வணிகர்கள் பெரும் அதிர்ச்சியடைந்துள்ளனர். இந்த விலை உயர்வு நுகர்வோருக்கு (வாடிக்கையாளர்கள்) நேரடி பாதிப்பை ஏற்படுத்த உள்ளது.இந்நிலையில் 3 மாதங்களில் வணிக கேஸ் விலை 81 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளதாகமக்களவைஎதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார். இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:– நான் சொல்லியிருந்தேன் – தேர்தலுக்குப் பிறகு தான் பணவீக்கம் சூடு பிடிக்கும் என்று.. தேர்தல் முடிந்து விட்டதால் தற்போது வணிக கேஸ் சிலிண்டர் விலையை இதுவரை இல்லாத வகையில் ஒரே நாளில் ரூ.993 மத்திய அரசு உயர்த்தியுள்ளது.

பிப்ரவரி மாதம் முதல் தற்போது வரை வணிக கேஸ் சிலிண்டர் விலை ரூ.1,380 உயர்ந்துள்ளது.வெறும் 3 மாதங்களில் வணிக கேஸ் விலை 81 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது. தேநீர்க் கடை, தாபா, ஓட்டல், பேக்கரி, ஸ்வீட்ஸ் கடை என பொதுமக்கள் பலருடைய சுமை அதிகரித்துள்ளது. இது அன்றாடம் உணவு கிடைப்பதில் பொதுமக்களுக்கும் கூட பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். முதலில் கேஸ் சிலிண்டர் மீதான விலை உயர்வு.. அடுத்தது பெட்ரோல்–டீசல் விலை உயர்வாகத்தான் இருக்கும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


**செய்திகள்**

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்
DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்
இணையுங்கள்



Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# பெரியகுளம் கைலாசநாதர்மலை கோயில் சித்ரா பௌர்ணமி முன்னிட்டு கிரிவலம்...



தேனி மாவட்டம் பெரியகுளம் கைலாசபட்டி அருகில் உள்ள கைலாசநாதர் மலைக்கோயிலில் 1/5/26 வெள்ளிக்கிழமை சித்ரா பௌர்ணமியை முன்னிட்டு காலையில் இருந்தே பக்தர்கள் கிரிவலம் வந்தனர் காலையில் சிறப்பு அபிஷேகம் செய்து தீபாராதனைகளும் நடைபெற்றது மாலை 6.00 மணி முதல் சிறப்பான அன்னதானத்தை முன்னால் ஆவின் மண்டல தலைவரும் முன்னால் நகர்மன்ற தலைவர் ஓ.ராஜா, டாக்டர் முத்துகுகன் சார்பாக வழங்கபட்டது பலமாவட்டத்தில் இருந்துஅதிக பக்தர்கள் கலந்து கொண்டனர் ஏற்பாடுகளை சிறப்பு கௌரவ ஆலோசகர் வி.ப. ஜெயபிரதீப் தலைவர் கு.நாராயணன்செயலாளர் க.சிவகுமார் பொருளாளர் விஜயராணிஅன்பர்பணிசெய்யும் பராமரிப்பு குழுவினர்கள் செய்திருந்தனர்.



தூத்துக்குடியில் உழைப்பாளர் தினத்தை முன்னிட்டு, ஆயிரம் பிறை பூங்காவில் அமைந்துள்ள தொழிலாளர் சிலைக்கு மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி மலர் தூவி மரியாதை செலுத்தினார். தொழிலாளர்களின் உழைப்பையும் தியாகத்தையும்போற்றும்விதமாகஒவ்வொருஆண்டும்மேமாதம்முதல்தேதிஉழைப்பாளர்தினம்கொண்டாடப்படுகிறது. அதன்படி, தூத்துக்குடி ஆயிரம் பிறை பூங்காவில் உள்ள தொழிலாளர் சிலைக்கு மேயர் மலர் தூவி தனது மரியாதையைச் செலுத்தினார். இந்நிகழ்வில் வட்ட செயலாளரும் முன்னாள் மாமன்ற உறுப்பினருமான ரவீந்திரன், பகுதி செயலாளரும் மாமன்ற உறுப்பினருமான சுரேஷ்குமார், பகுதி செயலாளர் தொ. நிர்மல்ராஜ், மாமன்ற உறுப்பினர்கள் தனலட்சுமி மற்றும் அந்தோணி மார்ஷலின் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# வணிக சிலிண்டர் பிரச்சனையில் உலகமே திண்டாடிக் கொண்டிருக்கிறது மதுரையில் புதிய நீதிக் கட்சி ஏசி சண்முகம் பேட்டி



வணிக சிலிண்டர் பிரச்சனையில் உலகமே திண்டாடிக் கொண்டிருக்கிறது. துரையில் புதிய நீதிக் கட்சி ஏசி சண்முகம் பேட்டி

எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் முதலமைச்சர் ஆவது உறுதி..

மத்திய தொகுதியில் இயக்குனர் சுந்தர் சி அவர்கள் போட்டியிடுகிறார்.அதிகமானவாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுவார்.

பெரும்பான்மை கிடைக்கவில்லை என்றால் விஜய்விடம் பேச்சுவார்த்தை நடத்த வாய்ப்பு உள்ளதா? அது போன்ற வாய்ப்புகள் நிச்சயம் வராது..* தவெகதலைவர் விஜய் எதிர்பார்த்ததை விட அதிகமான வாக்குகளை பெறுவார் என்ற வாய்ப்புள்ளது.*

எக்ஸிட் போல் பல அமைப்புகள் ஆளுங்கட்சி கையில் உள்ளது. இந்த தேர்தல் புதுமையான தேர்தல்..

வணிக சிலிண்டர் பிரச்சனையில் உலகமே திண்டாடிக் கொண்டிருக்கிறது..

பத்து கப்பல்கள் வரும் இடத்தில் இரண்டு கப்பல்கள் வருவதால் டிஸ்ட்ரிகூட் செய்வதில் பிரச்சனை உள்ளது.

விஜய்க்கு எதிர்பார்த்ததை விட அதிகமான வாய்ப்புகள் உள்ளது.. ஒரு இரு சில தொகுதிகளில் ஜெயிக்கலாம்.*

சுந்தர் சி அவர்கள் அதிக வாக்கு வித்தியா சத்தில் வெற்றி பெறுவார்.. மதுரையில் உள்ள 10 தொகுதிகளில் விட அதிகமான வாக்கு வித்தியாசத்தில் சுந்தர் சி வெற்றி பெறுவார்.

# கண்ணகி கோவிலில் பூர்ண கும்பம் வைத்து வழிபட்ட கூடலூர் கண்ணகி தேவி அறக்கட்டளையினர்

சித்ரா பௌர்ணமி திருநாளில் மங்கலதேவி கண்ணகி திருக்கோயிலில் மகாலட்சுமியின் அம்சமாக கருதப்படும் பூர்ண கும்பம் (நிறைகுடம்)வைத்து கூடலூர் கண்ணகி தேவி அறக்கட்டளையினர் கண்ணகி அம்மனை வழிபட்டனர்.அதனை கண்ணகி கோவில் சித்ரா பவுர்ணமி திருவிழா தேனி மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. தேனிமாவட்டம், கூடலூர் அருகே பளியன்குடி அருகே விண்ணேற்றிப்பாறை மலை உச்சியில் மங்கலதேவி கண்ணகி துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டதோடு, பக்தர்கள் பாதுகாப்பாக பயணிக்க வனத்துறை ஊழியர்கள் 500 மீட்டர் இடைவெளியில் நியமிக்கப்பட்டு இருந்தனர்.பளியங்குடி வழியாக நடந்து செல்லும் பக்தர்களுக்கு ஐந்து லிட்டர் தண்ணீர் கேன் பட்டிருந்தது. பக்தர்களின்வசதிக்காககூடுதல் பேருந்து வசதிகள், மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.பக்தர்கள் அனைவருக்கும் தண்ணீர் தட்டுப்பாடு இல்லாத அளவிற்கு தேவையான அளவு சுகாதாரமான குடிநீர்,



தொடர்ந்து பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கினார்கள்.அறக்கட்டளை செயலாளர் வழக்கறிஞர் லலிதா, தலைவர் மகேந்திரன்,துணைத் தலைவர் நேரு, பொருளாளர் குமரன் உட்பட அறக்கட்டளைநிர்வாககுழுவினர் கலந்து கொண்டனர். கூடலூர் கண்ணகி தேவி அறக்கட்டளை நிர்வாகத்தினர் கூறும்போது: பனியன்குடி வழியாக தமிழக வனப்பகுதியில் சாலை அமைத்தால் தமிழகத்தில் இருந்து வரும் பக்தர்கள் எந்த இடையூறும் இன்றி கண்ணகி அம்மனை வழிபாடு செய்வார்கள்.சாலைஅமைப்பது ஒன்றே தமிழக பக்தர்கள் எந்தவித இடையூறும் இன்றி கண்ணகி அம்மனை தரிசிப்பதற்கு தீர்வாக இருக்கும் என்று தெரிவித்தனர்.தமிழகஎல்லை பகுதியான கூடலூர் பளியன்குடி அருகே விண்ணேற்றிப்பாறை மலை உச்சியில் அருள் பாலிக்கும் மங்கலதேவி கோவில் அமைந்துள்ளது. தமிழக-கேரள மாநில எல்லையில் அமைந்துள்ள இந்த கோவில் சேர மன்னன் செரன் செங்குட்டுவனால் கட்டப்பட்டது. சித்ரா பௌர்ணமி முழு நிலவுநாளை முன்னிட்டு நடைபெற்ற இந்த திருவிழாவில் இரு மாநிலங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தார்கள்.

அதுபோல்,கூடலூர் அருகே பளியன்குடி மலைப்பகுதி வழியாக ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் நடந்து செல்வது வழக்கம்.பக்தர்கள் நேற்று அதிகாலையில் இருந்தே பாதயாத்திரையை தொடங்கினார்கள்.பளியன்குடியில் இருந்து கண்ணகி கோயில் வரை நடந்து செல்லும் பாதை 6.6 கி. மீட்டர் உள்ளது.நடந்து செல்லும் பாதைகள் பக்தர்கள் வசதிக்காக வனச்சரகர் பிரபாகரன் தலைமையில் சீரமைக்கப்பட்ட நிலையில்,ஆங்காங்கே வனத்துறையினர் ... வழங்கப்பட்டது.வெயிலின் தாக்கம் கருதி வழி நெடுகிலும் ஆங்காங்கே மருத்துவக் கூடாரங்கள் அமைத்து மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டன. மேலும் கூடுதலாக குளுக்கோஸ்பொடி உப்பு கரைசல் உள்ளிட்ட பொருட்கள் வெயிலின் தாகத்தை தணிப்பதற்காக பக்தர்களுக்கு வழங்கப்பட்டது. தேனி மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் அதிகாலையில் பொங்கல் வைக்கப்பட்டு, பசுமையை குறிக்கும் வகையில் மங்கல தேவி கண்ணகிக்கு பச்சை பட்டு சாத்தப்பட்டு வண்ண மலர்கள் மற்றும் சிறப்பு அலங்கார பொருட்கள் கொண்டு சிறப்பான முறையில் அலங்காரம் செய்யப்பட்டு பக்தர்களுக்கு காட்சி அளித்தார். மேலும்கடந்தஆண்டைவிட இந்த ஆண்டு கண்ணகி தேவியை தரிசிக்க வரும் பக்தர்களுக்கு தேனி மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டு ... கழிப்பிட வசதி, போன்ற அடிப்படை வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மேலும், வாகன நெரிசலை ஒழுங்கு படுத்துவதற்காக வழிநெடுகிலும் காவல்துறையினர் பணியமர்த்தப்பட்டு சீரான போக்குவரத்திற்கான பணிகளை மேற்கொண்டனர்.பொதுமக்கள் சிரமமின்றி சென்று வருவதற்கு குமுளி பேருந்து நிலையத்தில் சிறப்பு கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டு, கண்காணிக்கப்பட்டது. மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது.மேலும், கோயிலுக்கு வருகை தருகின்ற பக்தர்களின் பாதுகாப்பிற்காக ஏராளமான ஆண், பெண் காவலர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.மேலும், இரு மாநில வனத்துறையினர் வன விலங்குகளால் பொதுமக்களுக்கு எவ்வித அச்சுறுத்தலும் ஏற்படாத வண்ணம் தடுப்பு வேலிகளை அமைத்து, பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டனர்.

# தமிழ்நாடு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள் சங்கம் முப்பெரும் விழா



சேதுபதி மேல்நிலைப் பள்ளி அருகே தமிழ்நாடுஉயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள்-சங்கம் சார்பில் முப்பெரும் விழா நடைபெற்றது. மாவட்ட தலைவர் தென்கரை முத்துபிள்ளை தலைமை வகித்தார் மாவட்ட செயலாளர் திவ்ய நாதன் வரவேற்புரை ஆற்றினார் மாவட்ட பொருளாளர் ஜெயக்குமார் மாவட்ட அமைப்பு செயலாளர் ஆத்மநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்மாநிலதலைவர் அன்பரசன் மாநில பொதுச் செயலாளர் மாரிமுத்து மாநில பொருளாளர் இளங்கோ மாநில அமைப்பு செயலாளர் நவநீதகிருஷ்ணன் மேனாள் மாநில தலைவர் சத்தியமூர்த்தி மேனாள் மாவட்ட செயலாளர் பாஸ்கரன் ஆகியோர் கலந்துகொண்டு பேருரை ஆற்றி நினைவு பரிசுகள் வழங்கி கௌரவித்தனர் மதுரை தேனி முதன்மை கல்வி அலுவலர்கள் தயாளன் நாகேந்திரன் மதுரை மேலூர் சிவகாசி கோவில்பட்டி மாவட்ட கல்வி அலுவலர்கள் கணேசன்,சிவக்குமார் செந்தில் குமார் பாஸ்கரன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டனர் மாவட்டத் துணைத் தலைவர் முத்துக்குமரன் நன்றியுரை கூறினார் இந்நிகழ்வில் பணி நிறைவு பெறும் / பதிவு உயர்வு பெறும் ஆசிரியர்களுக்கு சால்வை அணிவித்து கௌரவிக்கப்பட்டது.

# கொடைக்கானலில் பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு: சுற்றுலா பயணிகள், உள்ளூர் மக்கள் தவிப்பு

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் உள்ள பங்க்குகளில் பெட்ரோல், டீசலுக்கு திடீரென தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் சுற்றுலாப் பயணிகள், உள்ளூர் மக்கள் சிரமத்துக்கு ஆளாகியுள்ளனர்.

கோடை விடுமுறையை முன்னிட்டு கொடைக்கானலுக்கு தமிழகம் மட்டுமின்றி வெளி மாநிலங்களில் இருந்து சுற்றுலாப் பயணிகள் குவிந்து வருகின்றனர். இதனால் சுற்றுலா இடங்கள் மட்டுமின்றி கொடைக்கானல் நகர் பகுதியில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. (சனிக்கிழமை) காலை முதலே கொடைக்கானலின் நுழைவு பகுதியான வெள்ளிநீர் வீழ்ச்சி அருகே டோல்கேட்டில் வாகனங்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தன.

கொடைக்கானல் டோல்கேட்டை கடக்க வாகனங்கள் ஒருமணி நேரத்துக்கு மேலாக காத்திருந்தன. இதனால் மூன்று கிலோ மீட்டர் தூரத்துக்கு நூற்றுக்கணக்கான வாகனங்கள் மலைச்சாலையில் அணிவகுத்து நின்றன. சுற்றுலாப் பயணிகளின் வருகை, உள்ளூர் மக்களின் தேவை காரணமாக இங்குள்ள 3 பங்க்குகளில் பெட்ரோல், டீசலுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதில், ஒரு பங்க்கில் முழுமையாக பெட்ரோல், டீசல் தீர்ந்துவிட்டன. எரிபொருள் கிடைக்காமல் போய்விடுமோ என்ற அச்சத்தில் வாகன ஓட்டிகள் போட்டிப் போட்டுகொண்டு எரிபொருளை நிரப்பி வருகின்றனர். இதனால்பெட்ரோல்பங்க்குகளில் வாகனங்கள் அணிவகுத்து நிற்கின்றன. சுற்றுலா பயணிகளின் நிலைமையை கருத்தில் கொண்டு தட்டுப்பாடின்றி எரிபொருள் கிடைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது. பங்க் உரிமையாளர்கள் கூறுகையில், 'அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகையால் வழக்கத்தைவிட கூடுதலாக பெட்ரோல், டீசல் விற்பனையானது.மேலும், போக்குவரத்து நெரிசல் காரணமாக குறிப்பிட்ட நேரத்தில் பெட்ரோல், டீசல் வந்து சேர முடியாத நிலை உள்ளது.எரிபொருள் வந்ததும் நிலைமை சரியாகி விடும்' என்றனர்.





## அச்சிறுப்பாக்கம் அருகே

# அங்காள பரமேஸ்வரி வீரசாம்பவி சித்த பீடத்தில் பௌர்ணமி பூஜை

செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் அருகே உள்ள திருமுக்காடு ஊராட்சியில் எழுந்தருளி அருள் பாலிக்கும் அங்காள பரமேஸ்வரி வீர சாம்பவி சித்த பீடத்தில் சித்திரை பௌர்ணமி பூஜை முன்னிட்டு சித்த பீடத்தில் மாங்கல்ய பூஜை, கலச பூஜை, மற்றும் சிறப்பு அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடைபெற்றது. விஜய வீரசாம்பவி சுவாமிகள் உலக மக்கள் சுபிட்சம் உடன் வாழ அங்கப்பிரவேசம் செய்து பக்தர்களுக்கு தீபாராதனை காண்பித்தார். இதில் திரளான பக்தர்கள் பங்கேற்று சாமி தரிசனம் செய்தனர். விழாவில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு சித்த பீடம் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது



ஈரோடு மாவட்டம் கோபிச்செட்டிபாளையம் அருகே உள்ள பச்சமலை முருகன் கோவிலில்சிறப்புபூஜைமற்றும்அலங்காரவழிபாடுநடைபெற்றது.சித்ராபௌர்ணமியை முன்னிட்டு முருகப்பெருமான் மலர் அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்தார். சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து பக்தர்கள் திரளாக கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். கோவிலில் பக்தி நிறைந்த சூழல் நிலவியதுடன், சிறப்பு அர்ச்சனைகள் மற்றும் வழிபாடுகள் நடைபெற்றன.




கடலூர் மாவட்டம் வேப்பூர் அடுத்துள்ள சேப்பாக்கம் கிராமத்தில் எழுந்தருளியுள்ள அருள்மிகு ஸ்ரீ கெங்கையம்மன் திருக்கோவில் சித்திரை திருவிழா கோலாகலமாக நடைபெற்று வரும் நிலையில், அதன் ஒன்பதாம் நாள் திருவிழாவான இன்று ஏராளமான பக்தர்கள் அலகு குத்தி தங்களது நேர்த்திக் கடனை பக்தியுடன் செலுத்தினர். திருவிழாவைக் காண திரளான பக்தர்கள் கலந்துகொண்ட இந்நிகழ்வில், மனித உரிமைகள் கழகத்தின் சார்பில் பக்தர்களின் தாகம் தீர்க்கும் வகையில் கடலூர் மண்டலத் தலைவர் எம். ராமு, சேப்பாக்கம் கிளைத் தலைவர் எஸ்.ஆர். ஆனந்தன், கடலூர் வடக்கு மாவட்ட செயலாளர் ஆர். வெண்ணிலா மற்றும் சேப்பாக்கம் பொருளாளர் டி. ரம்யா ஆகியோர் நீர் மோர் உள்ளிட்ட குளிர்பானங்கள் வழங்கினர். தொடர்ந்து, மனித உரிமைகள் மீறல் தொடர்பாக பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டன.

## மே 1 தொழிலாளர் தினத்தில்

# டி.வி.எஸ். தொழிலாளர்களின் ரத்ததான முகாம் நடைபெற்றது

செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர் வட்டம் மே 1 தொழிலாளர் தினம் டிவிஎஸ் தொழிலாளர்கள்

ரத்ததான முகாம் மற்றும் 5 கிலோமீட்டர் வரை தலைக்கவசம் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

பொலம்பாக்கம் டி.வி.எஸ் பிரேக்ஸ் இந்தியா நிறுவனத்தின் தொழிலாளர்கள் சார்பில் மே தின விழா கொண்டாடப்பட்டது. மே தின விழாவையொட்டி தேசிய இன்ஜினியரிங் தொழிலாளர் சங்கம் சங்கத் தலைவர்

டாக்டர். பி.சீனிவாசன் தலைமையில்சங்கொடி



ஏற்றி விழா தொடங்கி வைத்தார். இந்த விழாவில்சிறப்புவிருந்தினராக டி.வி.எஸ் பிரிக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் நிறுவனர் டாக்டர் ராமானுஜம், துணை தலைவர் விஜி சந்தானம், டி.வி.எஸ் மேனேஜிங் டைரக்டர் ஸ்ரீராம் விஜி ஆகியோர் தொழிலாளர்களுக்கு மே தின வாழ்த்து செய்திகள் தெரிவித்தனர். தேசிய இன்ஜினியரிங் தொழிலாளர் மாநில சங்க தலைவர் டாக்டர் சீனிவாசன், டிவிஎஸ் நிறுவனத்தின் வளாகத்தில் நடத்தப்பட்ட ரத்ததான முகாமில் தொடங்கி வைத்தார். இந்த முகாமில் தொழிலாளர்கள்

250 க்கும் மேற்பட்டோர் ரத்த தானம் செய்தனர். அதன் பின்னர், டிவிஎஸ் நிறுவனத்தில் இருந்து சிறுநாகலூர் வரை தலைக்கவசம் விழிப்புணர் குறித்தபேரணியும் மாநில சங்கத் தலைவர் டாக்டர் சீனிவாசன் தொடங்கி வைத்தார். பேரணியில் விபத்தில்லா பயணத்தை மேற்கொள்வோம்,

தலைக்கவசம் உயிர்க்கவசம் என்ற வாசகங்களை வலியுறுத்தது நோக்கமாக விழிப்புணர்வு பேரணியை நடத்தினர். இந்தப் பேரணியில் 300-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பங்கேற்றனர். அதன் பின்னர், சிறு நாகலூர் தனியார் திருமண மண்டபத்தில் நடந்த மே தின கூட்டரங்கில் 2025 செப்டம்பர் மாதம் முதல் 2026 பிப்ரவரி மாதம் வரை உயிரிழந்த தொழிலாளர்கள் 7 பேரின் குடும்பத்தினருக்கு தொழிலாளர்கள் பங்களிப்பு உடன் திரட்டப்பட்ட ரூபாய் 4.50 லட்சம் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

# 10 ஆண்டுகளுக்குப் பிறகு சேப்பாக்கம் கிராமத்தில் களைகட்டிய திருவிழா


## பக்திப் பரவசத்துடன் அலகு குத்தி நேர்த்திக்கடன் செலுத்திய பக்தர்கள்



கடலூர் மாவட்டம் வேப்பூர் அருகேயுள்ள சேப்பாக்கம் கிராமத்தில் கடந்த 10 ஆண்டுகளாக நடைபெறாமல் இருந்த ஸ்ரீ முத்து மாரியம்மன் திருக்கோவில் திருவிழா, இந்த ஆண்டு வெகு விமரிசையாக நடைபெற்று வருகிறது. இதன் முக்கிய நிகழ்வான ஒன்பதாம் நாள் திருவிழாவில் ஏராளமான பக்தர்கள் அலகு குத்தி தங்களது நேர்த்திக்கடனைச் செலுத்தினர். சேப்பாக்கம் கிராமத்தில் அமைந்துள்ளது பிரசித்தி பெற்ற பழமையான மாரியம்மன் கோயிலில் கடந்த 10 ஆண்டுகளாக பல்வேறு புனரமைப்பு மற்றும் திருப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வந்தன. இதன் காரணமாக, அப்பகுதியில் ஆண்டுதோறும் நடைபெறும் பாரம்பரிய திருவிழா தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், கோயிலின் திருப்பணிகள் அனைத்தும் முழுமையாக நிறைவடைந்து, கடந்த ஆண்டு மகா கும்பாபிஷேகம் பெருவிழா வெகு சீரும் சிறப்புமாக நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து, 10 ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு இந்த ஆண்டுக்கான திருவிழாவை வெகு விமரிசையாகக் கொண்டாட கிராம மக்களும், விழாக்குழுவினரும் முடிவு செய்தனர்.

அதன்படி, இந்த ஆண்டுக்கான திருவிழா கடந்த 23ஆம் தேதி காப்பு கட்டுதல் மற்றும் கொடியேற்றத்துடன் பக்திப் பரவசத்துடன் தொடங்கியது. திருவிழா தொடங்கிய நாள் முதல் ஒவ்வொரு நாளும் சுவாமிக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகளும், சிறப்பு அலங்காரத்தில் வீதி உலாக்களும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. இதில் சுற்றியுள்ள கிராமங்களைச் சேர்ந்த ஏராளமான மக்கள் கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்து வருகின்றனர். திருவிழாவின் முக்கிய நிகழ்வான ஒன்பதாம் நாள் விழா நேற்று மிகவும் விமரிசையாக நடைபெற்றது. 10 ஆண்டுகளுக்குப் பிறகு திருவிழா நடைபெறுவதால், சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் திரண்டு வந்து அலகு குத்தியும், தீச்சட்டி ஏந்தியும் தங்களது நேர்த்திக்கடனை பக்தியுடன் செலுத்தினர்.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு நடைபெறும் திருவிழா என்பதால், சேப்பாக்கம் கிராமமே விழாக்கோலம் பூண்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகளை கோயில் நிர்வாகத்தினர் மற்றும் கிராமப் பொதுமக்கள் சிறப்பாகச் செய்துள்ளனர்.



ஈரோடு மாவட்டம் அந்தியூர் பத்திரகாளி அம்மன் கோவிலில் சித்ரா பௌர்ணமி விழா சிறப்பாக நடைபெற்றது. பக்தர்கள் மேள தாளங்களுடன் பால்குடம் எடுத்து ஊர்வலமாக வந்து நேர்த்திக்கடன் செலுத்தினர்.ஆயிரக்கணக்கானோர் பங்கேற்ற இவ்விழாவில், பெண்களுக்கு பிரசாதமாக மஞ்சள் கயிறு, குங்குமம் வழங்கப்பட்டது. தொடர்ந்து அன்னதானமும் நடைபெற்றது.

# தமிழ்நாடு அனைத்து வகை அமைப்புசாரா தொழிலாளர்கள் நற்பணி நலசங்கம், சத்ரபதி சிவாஜி அறக்கட்டளையின் பசியில்லா தமிழகம் அமைப்பின் சார்பாக, மே 1 உழைப்பாளர் தினத்தை முன்னிட்டு சிறப்பு அன்னதான நிகழ்ச்சி நடைபெற்றது



தமிழ்நாடு அனைத்து வகை அமைப்பு சாரா தொழிலாளர்கள் நற்பணி நலச்சங்கம், சத்ரபதி சிவாஜி அறக்கட்டளையின் பசி இல்லா தமிழகம் அமைப்பு இணைந்து, கோவை காந்திமா நகர், பகுதியில் உள்ள எப்சிஐ குடோன் அருகே, தொழிலாளர்களுக்கு, மே 1 தொழிலாளர்தினத்தைமுன்னிட்டு அன்னதானம் வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு தமிழ்நாடு அனைத்து வகை அமைப்பு சாரா தொழிலாளர் நற்பணி நலச்சங்க நிறுவனத் தலைவர் டாக்டர் சரவணன் தலைமை தாங்கினார்.முன்னதாகதொழிலாளர் பெயர் பலகைக்கு மலர் தூவி மரியாதை செலுத்த பட்டு அனைவருக்கும் இனிப்புகள் வழங்கி கொண்டாடினர். தொடர்ந்து இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட தொழிலாளர்கள் சுமார் 500க்கும், மேற்பட்டவர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. நீண்ட வரிசையில் காத்திருந்த தொழிலாளர்கள், சிற்றுண்டியை பெற்றுக் கொண்டு, தொழிலாளர் தின வாழ்த்துகளையும் தெரிவித்தனர். கோவை மாநகரில் உள்ள பல்வேறு பகுதிகளில் ஆட்டோ ஒட்டுநர் பிரிவின் சார்பாக பல்வேறு நலத்திட்டங்களும், உணவுகளும், இனிப்புகளும் வழங்கபட்டது. குறிப்பாக சரவணம்பட்டி பகுதியில் அசைவ உணவுகள் சுமார் 200 தொழிலாளர்களுக்கு வழங்கபட்டது. வழக்கறிஞர் அணி கோவை மாவட்ட தலைவர் பாலசுப்பிரமணியம், ஆவாரம்பாளையம் பகுதி தலைவர் நாகராஜ், காந்திமா நகர் தலைவர் ரத்தினம், கிருஷ்ணன், முத்து, விநாயகபுரம் பகுதி தலைவர் அரவிந்த், ஆட்டோ ஓட்டுனர் பிரிவு மாநகர தலைவர் இசக்கி ராஜன், கட்டட பிரிவு கோவை மாவட்ட ஒருங்கிணைந்ததலைவர் ஈஸ்வரன்,மற்றும்சங்கத்தின் அங்கத்தினர்களான பிரபு, அஜித்குமார், ஆனந்த், விஜி, ரமேஷ், கண்ணன், சிவதாஸ், ஈஸ்வரன், உள்ளிட்ட பலரும், இவர்களுடன் அப்பகுதியை சேர்ந்த தொழிலாளர்களும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.




தென்காசி, திருநெல்வேலி விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் இருந்து 18 சக்கர வாகனங்கள்200, 16சக்கரவாகனங்கள்500, 14சக்கரவாகனங்கள்200என900வாகனங்கள் தற்பொழுது புலியரை வழியாக கேரள மாநிலத்திற்கு கனிம வளங்களை கொண்டு சென்று வருகின்றன தினமும் 30 ஆயிரத்து 800 டன் கனிம வளங்கள் 3 மாவட்டங்களில் இருந்து கேரள மாநிலத்திற்கு கொண்டு செல்லப்பட்டு வருகிறது இதன் மூலம் கேரள மாநிலத்திலிருந்து வெளிநாடுகளுக்கு கனிம வளங்கள் ஏற்றுமதி ஆகிறதோ என்கின்ற ஒரு சந்தேகம் ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே தூத்துக்குடி மாவட்டத்தில் இருந்து கனிம வளங்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி ஆவதாக தகவல்கள் உள்ள நிலையில் இந்த தகவல்களும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளன.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 வாக்கு எண்ணிக்கையை முன்னிட்டு, சேலம் மாவட்டத்தில் வாக்கு எண்ணும் பணி மற்றும் தபால் வாக்கு எண்ணும் பணியில் ஈடுபடவுள்ள நுண்பார்வையாளர்களுக்கான பயிற்சி மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் அ.அருண் தம்புராஜ் அவர்கள் தலைமையில் (30.04.2026) மாவட்ட ஆட்சியரகத்தில்நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) ராஜேஷ்கண்ணா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

### தென்காசி கலைஞர் அறிவாலயத்தில்

# திமுக தலைமை கழகம் வாயிலாகவாக்கு எண்ணிக்கை செல்லும்முன் வேட்பாளர்கள் மற்றும் முகவர்கள் கையாள வேண்டிய விதிமுறைகள் குறித்து காணொளி காட்சி



நடந்து முடிந்த சட்டமன்ற பொது தேர்தல் வாக்கு எண்ணிக்கை நாளை மறுதினம் நடைபெற உள்ளது வாக்கு எண்ணிக்கை நடைபெறும் மையங்களில் வாக்கு எண்ணிக்கை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் பயிற்சி அளித்தார் அதைப் போன்று மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி தலைமையிலான திமுக சார்பில் வாக்கு எண்ணிக்கைக்கு செல்லும் வேட்பாளர்கள் மற்றும் முகவர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய விதிமுறைகள் மற்றும் நடைமுறைகள் குறித்தும் செய்ய வேண்டிய பணிகள் குறித்தும் தலைமைக் கழகத்திலிருந்துவாக்கு எண்ணிக்கை மையங்களுக்கு செல்லும் வேட்பாளர்கள் மற்றும் முகவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது ஐந்து சட்டமன்ற தொகுதிகளின் வாக்கு எண்ணிக்கை ஸ்ரீராம் நல்லமணி யாதவா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வைத்து திங்கட்கிழமை காலை 8 மணிக்கு துவங்க உள்ளது இந்நிலையில் தென்காசிதிராவிடமுன்னேற்ற கழக மாவட்ட அலுவலகமாக சிவந்தி நகர்கலைஞர்அறிவாலயத்தில் நடைபெற்ற வாக்கு எண்ணிக்கை முக வர்கள் விழிப்புணர்வு நிகழ்ச்சி க்கு மாவட்ட கழக பொறுப்பாளர் ஜெயபாலன் தலைமை தாங்கினார் கழக அமைப்பு இணைச் செயலாளர்அன்பகம் கலை கடையநல்லூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர்திமு ராசேந்திரன்தென்காசி சட்டமன்ற தொகுதி வேட்பாளர் மருத்துவர் கலை கதிரவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்-முன்னாள் தெற்கு மாவட்ட செயலாளர்வழக்கறிஞர் சிவபத்ம நாபன்உன்னால் வடக்கு மாவட்ட செயலாளர் டாக்டர் செல்லத்துரை தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆறுமுகசாமி சேக் தாவது-தென்காசி நகர மன்ற தலைவர் சாதிர் நகரக் கழகச் செயலாளர் அப்பாஸ் பீரப்பா அழகு சுந்தரம்முன்னாள் ஒன்றிய செயலாளர் காசிதர்மம் துரை வழக்கறிஞர்கள்செந்தூர்பாண்டியன் தங்கராஜ் பாண்டியன் வழத்தறிஞர் அணியினர் மதச்சார்பற்றுக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் உட்பட ஏராளமானோர் திராவிட முன்னேற்றக் கழக தலைமை கழகம் மூலம்காணொளி காட்சி வாயிலாகபாக முகவர்கள் மற்றும் வாக்கு எண்ணிக்கை மையங்களுக்கு செல்லும் செய்ய வேண்டிய குறிப்பாக கவனிக்க வேண்டிய அத்தனை நிகழ்வுகளையும் காணொளி காட்சிகளாகவிளக்கப்பட்டது



ஈரோடு மாவட்டம் குருவரெட்டியூர் அரசு பள்ளியில் 20002001ம் ஆண்டு முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நடைபெற்றது. ஆசிரியர்களும் கலந்துகொண்டு சிறப்பித்த இந்நிழ்வில், மாணவர்கள் தாங்கள் பயின்ற வகுப்பறைகளை நேரில் கண்டு பழைய நினைவுகளை மீட்டெடுத்தனர். நீண்ட காலத்திற்குப் பின் நண்பர்களை சந்தித்த நெகிழ்ச்சியிலும், ஆசிரியர்களின் ஆசியிலும் மாணவர்கள் பரவசமடைந்தனர்.



ஈரோடு மாவட்டம் அந்தியூர் கரட்டுப்பாளையத்தில் அமைந்துள்ள போக்குவரத்துக் கழக பணிமனையில் மே1 அகில இந்திய 140 ஆவது உழைப்பாளர்கள் தினம் அந்தியூர் கிளை தொமுச சார்பாக சிறப்பாக கொண்டாடப்பட்டது. ஏராளமான ஓட்டுனர்கள், நடத்துனர்கள் மற்றும் டெக்னீசியன் கலந்து கொண்டனர். பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி தொழிலாளர் தினத்தை கொண்டாடினர்.



சர்வதேச மனித உரிமைகள் மற்றும் சமூகநீதி சபை மற்றும் உழைப்பாளர்கள் உரிமைகள் அணி மற்றும் யுனைடட் ஸ்டேட்ஸ் ஆப் இந்தியா பார்ட்டி இன் தேசிய தலைவர் ஆர்.செல்வகணேசன் ஆலோசனை மற்றும் மாநில தலைவர் ஆர்.தன்ராஜ்வழிகாட்டுதலுடன்மாவட்டதலைவர்ஜெ.கோபிநாதன்,மாவட்டசெயலாளர்டாக்டர்Gதங்கவேல்,மாவட்ட பொருளாளர் கு.கோபிநாத் ஏற்பாட்டின் படி ஈரோடு மாவட்டம், தொழிலாளர்கள் நலன் கருதி போற்றும் விதமாக மே தினவிழாவைமுன்னிட்டுபவானிலட்சுமிநகர்அண்ணாசுமைதூக்குவோர்சங்கநிர்வாகிகளுக்குநீண்டகாலசேவைகளின் அடிப்படையில் கௌரவிக்கும் விதமாக "உழைப்பாளர்கள் உரிமைகள் அணியின் சார்பாக நற்சான்றிதழ்" மாவட்ட செயலாளர் டாக்டர் G.தங்கவேல் வழங்கி கௌரவித்தார்.



ஈரோடு மாவட்டம் பவானி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியின் தலைமையாசிரியர் சேகர், வெள்ளிக்கிழமை பணி ஓய்வு பெற்றார். அவரை பலரும் பாராட்டி வருகிற சூழலில் பவானி நகர்மன்றதலைவர் சிந்தூரி இளங்கோவன் சந்தித்து பொன்னாடை போர்த்தி மரியாதை செய்து நினைவுப்பரிசினை வழங்கினார்.மேலும் பணிக்காலத்தில் சிறப்பாக பணியாற்றியதற்காகவும் வாழ்த்து தெரிவித்தார்.



ஈரோடு மாவட்டத்தில் நாளுக்கு நாள் வெயில் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில், ஈரோட்டில் பல்வேறு பகுதிகளான பெரியார் நகர், கருங்கல் பாளையம், சோலார், மரப்பாலம், சூரம்பட்டி, என்.ஜி.ஜி.ஓ காலனி பகுதியில் நொங்கு விற்பனை படு ஜோராக நடைபெற்றது வருகிறது.பொதுமக்கள் அதிக அளவில் வாங்கி சென்றனர்.

# Trump is an idiot: Californians fume over soaring petrol prices

*At a gas station in Los Angeles, Ryder Thomas wore a grimace of barely suppressed anger as he filled his pickup truck, watching the cost tick up to $130 for a full tank -- $30 more than he was paying before the US and Israel attacked Iran.*



*"I'm mad about the price, but I'm even madder about why it's so high," the 28-year-old told AFP.*

*This week, pump prices in the United States climbed to their highest level since early 2022, when Russia's full-scale invasion of Ukraine triggered a global surge in the cost of oil.*

*Hostilities in the Middle East, which began when Israel and the United States started bombing Iran on February 28, have crimped supply, sending the price of crude surging.*

*The war launched by President Donald Trump is unpopular all over the United States, with polls showing a clear majority disapprove of a conflict whose aims they think are unclear.*

*"There was absolutely no need for this war. It's just like when we invaded Iraq, there were no weapons of mass destruction," Thomas said.*

*"Trump is an idiot, that's all it is." For weeks, the Republican billionaire has insisted that attacking Iran was necessary to prevent the country from acquiring nuclear weapons, and has repeatedly promised a short conflict. But despite the overwhelming might of the US military, the Islamic republic has blocked the Strait of Hormuz -- a global trade artery used to transport a fifth of the world's oil and gas.*

*Domino effect*

*The result of this squeeze on supply is rising prices, sending gas in already-expensive California above $6 a gallon ($1.59 per liter), compared with around $4.50 a gallon before the war.*

*Thomas worries about the domino effect this oil crunch will have on everything else he buys, as the rising cost of transport pushes up the prices of everyday goods like food and clothing.*

*"I hope the middle-of-the-road voters who got Trump elected start thinking about it and realize what he's done to them," he said of a president who campaigned on reducing costs for everyday Americans.*

*Trump voter David Chavez, who was waiting among dozens of cars lining up to refuel at Costco -- a wholesale retailer whose prices are often a little lower than average -- said it was not that simple.*

*"It is not nice; we don't want to pay more for gas," acknowledged the cameraman as he got his credit card ready to fill up his minivan.*

*However, "we don't know everything that happens behind closed doors. It's too easy to blame one person for all the problems."*

*Food bank*

*Chavez said he voted for Democrats in the past, but switched to Trump because of former president Joe Biden's "poor handling of immigration and poor handling of the economy."*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.